UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1979 -8-
PERIODICALS DIVISION

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice,
Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆவணி 4 றம்ழான் 26 இதழ் 189
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 20-8-79

New Cambridge
Tutorrial Institutes
Thirunelvely Junction
நடைபெறுகின்றன (All Grades)
வாய்ப்பாட்டு : V M. நவரெட்ணம்
வயலின் : N. பாக்கியலக்ஷ்மி
மிருதங்கம் : S மகேந்திரன்
புல்லாங்குழல் : S ஆரியநாயகம்
26-8-79ல் புதிய தவணை ஆரம்பமாகின்றது.
9-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை 1-9-79 இல் ஆரம்பம்.
Spoken English By New Method
4 Months Course
புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்
நிர்வாகி :
V. M. PAKKIANATHAN

விண்வெளியில் 175 நாட்கள்

சோவியத் வீரர்கள் நேற்று பூமி திரும்பினர்

(மாஸ்கோ)

விண்வெளியில் மொத்தம நூற்று எழுபத்தைந்து நாட்கள் சஞ்சரித்துவிட்டு, இரண்டு சோவியத் விண்வெளி வீரர்கள் நேற்று பத்திரமாகப் பூமிக்குத் திரும்பியுள்ளனர்.

விண்வெளியில் ஆகக்கூடுதலாகத் தொடர்ச்சியாகத் தங்கியிருந்த சாதனையையும் இவர்கள் இப்பொழுது ஏற்படுத்தியுள்ளனர் என்று சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

என்.எம். இன்று இறுதியாத்திரை

(கொழும்பு)

இலங்கையின் முன்னோடி அரசியல் தலைவனும், சிந்தனையாளனும், சமதர்ம இலட்சியத் தலைமகனும் அரசியல் சட்ட வழிகாட்டியுமான அமரர் கலாநிதி என். எம். பெரேராவின் இறுதியாத்திரை இன்று பிற்பகல் 1·55 க்கு ஆரம்பமாகிறது. தகனக்கிரியைகள் இன்று மாலை 6-30 மணியளவில் சுதந்திர சதுக்கத்திலுள்ள விளையாட்டு அமைச்சு மைதானத்தில் நடைபெறும். இறுதிச் சடங்குகளுக்கான எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன.

கடந்த செவ்வாய்கிழமை இரவு கொழும்பு பெரியாஸ் பத்திரியில் காலமான கலாநிதி என் எம் பெரேராவின் பூதவுடல், முதலில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு பின்னர், யூனியன் பிளேஸிலுள்ள லங்கா சமசமாஜ கட்சி தலைமை அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து நேற்று முன்தினம் பாராளுமன்றத்துக்கு பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

மறைந்த தலைவருக்கு நேற்றுக் காலைவரை நான்கு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் தங்களது இறுதி அஞ்சலியை செலுத்தியிருந்தனர் என்று நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

'என் எம் மின் இறுதியாத்திரை இன்றுபிற்பகல் 1-55-க்கு பாராளுமன்றத்திலிருந்து புறப்படும்.

இன்று பகல் 1-45-க்கு பிரேதப் பேழையை அமைச்சர்களும், எம் பிக்களும் லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர்களிடமும் முக்கிய பிரமுகர்களிடமும் ஒப்படைப்பார்கள், இதனைத் தொடர்ந்து இறுதி ஊர்வலம், முக்கிய நகர வீதிகள் வழியாக சுதந்திர சதுக்கத்தை நோக்கி நகரும். தகனக் கிரியைகள் இன்று மாலை 6-30 மணியளவில் நடைபெறும்.

நாட்டின் நாலாபகுதிகளிலிருந்தும் பெருந்திரளான மக்கள் இன்று இறுதிச்சடங்கு வைபவத்தில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால் சகல பாதுகாப்பு உதவி வசதிகளும செய்யப்பட்டுள்ளன.

ரூ. 16 லட்சம் செலவில் ஐஸ் உற்பத்தி நிலையம்

யாழ்ப்பாணத்தில் அமைக்க கடற்றொழில் அமைச்சர் அங்கீகாரம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் ஐஸ் தேவையைப் பூர்த்தி செய்யும் மிகப்பெரிய ஐஸ் உற்பத்தி நிலையமொன்றை யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு, கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

யாழ் கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாஜத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ் மாவட்ட அமைச்சரின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி. கடற்றொழில் அமைச்சருடனும், அவரது செயலாளருடனும் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

16 லட்சம் ரூபா செலவில் நிறுவப்படும் இந்த ஐஸ் உற்பத்தி நிலையம் நாளொன்றுக்கு 225 அந்தர் ஐஸ் உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐஸ் உற்பத்தி நிலையத்தை

(6-ம் பாகம் பார்க்க)

"சிறுபான்மை மக்களுக்காக குரல்கொடுத்தவர்'

[யாழ்ப்பாணம்]

"45 வருட அரசியல் வாழ்வில், சிறுபான்மை மக்களுக்காக குரல்கொடுத்த பெருந்தலைவரை நாம் இழந்துவிட்டோம்."

இவ்வாறு கலாநிதி என் எம். பெரேராவின் மறைவு குறித்து யாழ், முஸ்லிம் வாலிபர் சங்கம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர். [கெ]

பலப்பரீட்சையில் சரண்சிங்

அரசு தப்புமா?

நிலைமை சாதகமாக இல்லை

(புதுடில்லி)

இந்திய லோகசபையில் இன்று நடைபெறும் பலப்பரீட்சையில் சரண்சிங் அரசாங்கம் தப்பிப் பிழைக்குமா?

கடைசியாக கிடைத்த செய்திகளின்படி, சரண்சிங் அரசாங்கத்தை ஆதரிப்பதில்லை என்று நேற்று மாலை இந்திரா காங்கிரஸ் எடுத்துள்ள முடிவிற்கிணங்கவும், ஸ்தாபன காங்கிரஸ் மத்தியில் நேற்று ஏற்பட்ட பிரச்னைகளின் எதிரொலியாகவும் சரண்சிங் அரசு 'உயிர்பிழைப்பது' மிகவும் கஷ்டமாகவே உள்ளது என்று தெரியவருகிறது.

இந்திய லோகசபை (பாராளுமன்றம்) இன்று காலை கூடுகிறது, சபை கூடியதுமே, சரண்சிங் அரசு மீதான நம்பிக்கைப்பிரேரணை முதலில் பிரதமர் சரண்சிங்கினால் தாக்கல்செய்யப்படும்.

இதற்கிடையே, நேற்று இங்கு கூடிய இந்திராகாங்கிரஸ் பாராளுமன்ற செயற்குழு, இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை நம்பிக்கைப் பிரேரணை பற்றி எந்தமுடிவையும் எடுக்காதபோதிலும், சரண்சிங் அரசுக்கு இந்திரா காங்கிரஸ் ஆதரவளிக்காது என்று முடிவாகிவிட்டதாக, இந்திராகாங்கிரசின் முக்கிய பிரமுகர் நேற்று இரவு கருத்து வெளியிட்டார்.

இது இவ்விதமிருக்க கூட்டரசு அமைப்பதில் எழுப்பியுள்ள தலைமைப்பிரச்னை சம்பந்தமாக ஸ்தாபனகாங்கிரசைச் சேர்ந்த இரு காங்கிரஸ் அமைச்சர்கள் நேற்று சரண்சிங் அமைச்சரவையிலிருந்து ராஜினாமா செய்துவிட்டனர்.

இதுபற்றி திரு சவான் நேற்றுமாலை கருத்து வெளியிடுகையில், கூட்டணி தலைமைப்பீடப் பிரச்னை சம்பந்தமாக அனைத்துகாங்கிரஸ் அமைச்சர்களுமே ராஜினாமா செய்யமுன் வந்ததாகவும்,

[6ம் பக்கம் பார்க்க]

"அரசில் சேருமுன்னர் திட்டத்தைக் கூறியிருக்கவேண்டும்!"

கருணாநிதி கண்டனம்

[திருச்சி]

ஆறு அம்சத் திட்டம் மீது அ. இ. அ. தி. மு. கழகம் மத்திய அமைச்சரவையில் சேர்ந்தது குறித்து, தி மு க தலைவர் கலைஞர் மு கருணாநிதி நேற்று கருத்துவெளியிடுகையில், ஆறு அம்சத்திட்டம் என்று மூடு மந்திரமாகக் கூறுமுன்னர், அத்திட்டம் பற்றி மக்களுக்கு அறிவித்திருக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நிருபர்களுக்கு அவர் நேற்று அளித்த பேட்டியில்; ஆறு அம்சத்திட்டத்தை திரு சரண்சிங் ஏற்றுக்கொண்டு இத் திட்டங்களின் விபரத்தை மக்களுக்குத் தெளிவாகத் தெரிவித்தபின்னருமே அ இ அ தி மு கழகம் மத்திய அமைச்சரவையில் சேர்ந்திருக்கவேண்டும் என்று கருத்து தெரிவித்து;

1972ல் தமது தலைமையில் தி மு க தமிழகத்தில் ஆட்சியில் இருந்தபோது அப்போது தி மு க அரசில் அமைச்சராகவிருந்த திருமதி சத்தியவாணி மீது கடுமையான ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி ராஷ்டிரபதியிடம் திரு எம் ஜி ராமச்சந்திரன் மகஜர் சமர்ப்பித்திருந்தார். இதனை மக்கள் இன்னும் மறக்கவில்லை" என்று கூறினார்.

கற்கோவளத்தில் 50 வீடுகள்

[புலோலி]

பருத்தித்துறைத் தொகுதியில், நிவாரணமளிக்கப்பட்ட சுயவீடமைப்புத்திட்டத்தின் கீழ் கற்கோவளத்தில் 50 வீடுகளை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை யாழ் தேசிய வீடமைப்புத் திணைக்களம் மேற்கொண்டுவருகிறது.

இவ் வீடுகளை அமைக்க விரும்புவோரிடமிருந்து வட

(6-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

தேவை

இரண்டு, இரண்டரைப் பரப்பில், அண்மையில் கட்டப்பட்ட வீடு அல்லது வீடு கட்டக்கூடிய வெற்றுக் காணி, சகல வசதிகளுடன் உடுவில், திருநெல்வேலி, இணுவில், மருதனுமடம், நல்லூர், சுண்டிக்குளி பகுதிகளில் விலைக்குத் தேவை. முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: பெட்டி இல: 3315, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 331

விற்பனைக்கு

1000 மில்க்வைற் நீலசோப் மேலுறையை நல்லூர்கோவில் முகப்பில் அமைந்திருக்கும் எமது விளம்பர விற்பனைக் காட்சிச்சாலையில் அல்லது தொழிற்சாலையில் கொடுத்து அழகிய "மகாத்மாகாந்தி இலை" ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். 3342

பயிற்சி

3 மாத மாலைநேர மின்னியல் டிப்ளோமா வகுப்புக்கள் 10-09-79-ல் ஆரம்பமாகவுள்ளன. விபரங்கட்கு: அதிபர், இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ்சினியரிங் ரெக்னொலொஜி, 11/B, மொம்பசாக் கட்டிடம், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 3341

கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்
இலங்கை

பின்வருவனவற்றிற்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையிலிருந்து கைதடி வைத்திய பீட உடலமைப்பியல்துறைக்குப் பிரேதங்களைக்கொண்டுசெல்லுதல்.
2. பரிசோதனைக்காக வெட்டிய பிரேதங்களைச் சேகரித்தலும் அகற்றுதலும்.

கேள்விகள் இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 1979 ஆகஸ்ட் 31-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 10/- ரூபாவும், மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக 100/- ரூபாவும் செலுத்தி உதவிப் பதிவாளரின் (நிருவாகம்) அலுவலகத்தில் பெறக்கூடிய விதிக்கப்பட்ட படிவத்தில் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பதிற் பதிவாளர்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம் - இலங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1979-08-15. 3344

பிஸ்கால் விற்பனை

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

குமரேசு முருகுப்பிள்ளை, வல்வெட்டித்துறை
வழக்காளி

இல. 13642

எதிர்

துரைராசா யோகரத்தினராசா, வல்வெட்டித்துறை
எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளி மேற்சொல்லப்பட்ட வழக்கில் 1977-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 7-ந் திகதியில் தீர்வையின்படி ரூபா 3600/-ம் மேலும் வழக்குச் செலவு ரூபா 100/-ம் 1977-ம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கம் ரூபா 3600/-க்கு 9 வீத வட்டியும் வழக்காளிக்கு கொடுபட வேண்டியதாகும். இதற்காக கீழே குறித்துச் சொல்லப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் பிரயோசனங்களையும் 1979-ம் ஆண்டு செப்ரம்பர் (புரட்டாதி) மாதம் 26-ந் திகதி காலை 10-30 மணிக்கு குறித்த ஆதனத்தில் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆதனத்தின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டி கோயிற்பற்று வல்வெட்டித்துறை "ஆனைவிழுந்தான்" குளி 3, இது உலாந்தா மேஸ்தர் க வேல்முருகுவால் 1940-ம் ஆண்டு ஆடி மாதம் 1-ந் திகதி விந்தாசிக்கப்பட்ட 1695-ம் இலக்கப் படத்தின் படி எல்லை கிழக்கு சந்தை, வடக்கு முத்துவடிவேலுவின் உரிமைக்காரருக்குரியாதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு மார்க்கண்டு கைம்பெண் முத்து மாணிக்கத்துக்கும் மறுபேருக்குமுரியாதனம்.

க. விஸ்வலிங்கம்,
பிஸ்கால்,
மரவட்ட நீதிமன்றம்,
பருத்தித்துறை.

3317

யாழ்ப்பாணத்தில்

மின்சாரம், நல்ல குடிதண்ணீர் வசதிகளுடன் வீடு அல்லது வீடுகட்டுவதற்கு காணி தேவை.

MANAGER
House and Property Trades Ltd,
No: 3, Model Market,
Jaffna.

போன்: 7698 3332

இலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்

புதிய மாணவரைச் சேர்த்தல்—1979

1. தகமை: க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் மூன்று திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது க. பொ. த (உயர்தரம்) விஞ்ஞான பாடம் விரும்பத்தக்கது
2. வைத்திய பரம்பரையில் வந்தவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

விண்ணப்பப்படிவத்தை ரூபா 2/-க்கான தபால் கட்டளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 10-9-79.

இறுதி ஆண்டுப் பரீட்சை 1979-78-77

ஆயுள்வேதத் திணைக்களம் நடாத்தும் 1977-78-79-ம் ஆண்டுக்குரிய இறுதிப் பரீட்சை 1979 செப்ரெம்பர் மாதம் இறுதி வாரம் தொடக்கம் ஒக்டோபர் முதல் வாரம் வரை நடைபெறும்.

இதற்குரிய விண்ணப்பப் படிவங்களை மேற்படி கல்லூரி அலுவலகத்தில் இருந்து 2/- கட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டும் அதனை அலுவலகத்தில் சேரும்படி அனுப்பவேண்டும். இதற்கு உரிய கட்டணம் பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்.

3339

ரஸ்ற் ரவல் சேர்விஸ்

(T UST TRAVEL SERVICE)

குளிரூட்டப்பட்ட "சிதம்பரம்" கப்பலில்
சிங்கப்பூர், மலேசியா பயணம்
திருகோணமலையிலிருந்து 10 9 79ல் புறப்படுகிறது
கட்டணம் 4134/- முதல் 9228- வரை (திரும்பி வருவதற்கும் சேர்த்து)
முற்பணமாக 50% செலுத்தினால் ஒரு வாரத்திற்குள் பிரயாணச்சீட்டு வழங்கப்படும்.

விபரங்களுக்கு:
Trust Travel Service
11 A, மொம்பசாக் கட்டிடம், Telephone: 8111
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது

Jayabalasingam and Co,
"Customs View" — Kankesanthurai — Telephone: 34

உங்கள் ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

சட்டத்தரணியைத் தாக்கி

கொலை செய்ய முயன்றதாக 7 பேர் மீது வழக்கு

[மாவிட்டபுரம்]

சட்டத்தரணி ஒருவரை தாக்கிக் கொலை செய்ய எத்தனித்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட 2 பெண்கள் உட்பட 7 சந்தேக நபர்களையும் இம் மாதம் 20ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மல்லாகம் நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

அச்சுவேலியைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. கே. உலகநாதனின் வீட்டினுள் அத்துமீறிப் புகுந்து அவரைத் தகாத வார்த்தைகளால் ஏசி, அடித்தும், உதைத்தும் தாக்கிக் கொலைசெய்ய எத்தனித்ததாக அச்சுவேலியைச்சேர்ந்த சின்னத்தம்பி மயில்வாகனம், சந்தையா சுப்பிரமணியம், ஆ. சிவதாஸ், எஸ். விமலநாதன், இரிலப்பனையைச் சேர்ந்த நல்லையா இராசநாயகம் ஆகியோர்மீதும் 1ம், 2ம் நபர்களின் மனைவிகள் செல்லம்மா, சாந்தநாயகி ஆகிய பெண்மணிகள் மீதும் இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

தனிப்பட்ட வழக்காக சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்தினால் பதிவுசெய்யப்பட்ட இவ்வழக்கையடுத்து மேற்படி நபர்கள் ஐவரையும், பெண்மணிகள் இருவரையும் இம் மாதம் 20ம் திகதி தம்முன் ஆஜராகுமாறு மல்லாகம் நீதிபதி திரு எஸ். ஆனந்தக்குமாரசாமி உத்தரவிட்டார்.

இன்றைய உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுதசுவாமி கோவிலில் இன்று 37-வது நாள் மண்டலாபிஷேகம் காலை 9 மணிக்கு நடைபெறும். பிற்பகல் 5-30 மணிக்கு சாயங்காலப் பூஜையைத் தொடர்ந்து "எப்படிப் பாடினரோ" என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ தி சுப்பிரமணிய சாஸ்திரிகள் உரையாற்றுவார்; மாலை 3 30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் சுவாமி வீதியுலாவருதலும் நடைபெறும். (கொ-அ)

வடநாரந்தனை அம்பாள் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை வடக்கு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 27ந் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவிருக்கிறது. அடுத்தமாதம் 4ந் தேதி செவ்வாய்க்கிழமைவேட்டைத் திருவிழாவும், 5ந் திகதி புதன் கிழமைரதோற்சவமும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்

1ம், 5ம், 1ம் திருவிழாக்களின்போது பகல் அஷ்டோத்திரசத சங்காபிஷேகம் நடைபெறும்.

ரதோற்சவத்தன்றுபகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். [கொ-அ]

"தொழிலாள வர்க்கத்திற்கு பேரிழப்பு"

[யாழ்ப்பாணம்]

"டாக்டர் என் எம் பெரேராவின் மறைவு இந்த நாட்டிலுள்ள தொழிலாளவர்க்கத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்."

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு க. தர்மலிங்கம் நேற்று நடைபெற்ற நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபை நடாத்திய டாக்டர் என் எம் பெரேராவின் அனுதாபக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "டாக்டர் என் எம் தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் பெரும்பங்கு கொண்டிருந்தார். அவரது மரணம் இந்நாட்டிலுள்ள தொழிலாளவர்க்கத்திற்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழினமும் நலமொரு நண்பனை இழந்து விட்டது' என்றார்.

டாக்டரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவுக்கு முகமாக நல்லூர்ப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் கறுப்புக்கொடி தொங்கவிடப்பட்டுள்ளது. (கொ)

"சகல மக்களுக்கும் பேரிழப்பு"

[யாழ்ப்பாணம்]

"டாக்டர் என் எம் பெரேரா ஒரு தலைசிறந்த அரசியல்வாதியாகவும், சோஷலிஸவாதியாகவும் திகழ்ந்ததுடன் தலைசிறந்த விளையாட்டு வீரராகவும் திகழ்ந்தார். அவரது மறைவு இலங்கைவாழ் சகல மக்களுக்கும் பேரிழப்பாகும்."

வட இலங்கை சிங்களப் பொதுநல சங்கச் செயலாளர் திரு கடலைத்தலை தயாவச, டாக்டர் என் எம் பெரேராவின் மறைவுகுறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"டாக்டர் என் எம் பெரேரா இந்நாட்டில் வாழ்கின்ற மக்கள் எல்லோரும் வசதியாக வாழவேண்டுமென்று விரும்பினார். அவர் எச்சந்தர்ப்பத்திலும் சந்தர்ப்பவாதியாக வாழவில்லை. தான் கொண்டிருந்த இலட்சியத்தைக் கடைசிவரை கடைப்பிடித்து, அதன் வெற்றிக்காக இறுதிவரை போராடி இந்நாட்டு மக்களின் உள்ளத்தில் விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணினார்". (கொ-அ)

'சம அந்தஸ்து குரல்எழுப்பிய பெருமகன்"

[யாழ்ப்பாணம்]

இலங்கை ஐக்கிய கூட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு ஆ. துரைராஜசிங்கம் டாக்டர் பெரேராவின் மறைவு குறித்து விடுத்த அனுதாபச் செய்தி வருமாறு:

"தொழிலாள வர்க்கத்தின் பெரும் தலைவன் மறைந்த டாக்டர் என் எம் பெரேரா, ஈழத்தமிழருக்கு சம உரிமைக் குரல் எழுப்பிய முதற் சிங்களப் பெருமகனும் டாக்டர் பெரேரா தான். முதிர்ந்த அரசியல்வாதி, சகல கட்சிகளினதும் நன்மதிப்பைப்பெற்றவர். அன்னாரது இழப்பு தொழிலாளவர்க்கத்திற்குக் கவலையளிப்பதாகும்" (க)

'தொழிலாளருக்கு பேரிழப்பு'

[யாழ்ப்பாணம்]

இலங்கை வாழ் பத்தாயிரத்திற்கும் அதிகமான கூட்டுத் தொழிலாளர்கள் கலாநிதி டாக்டர் என். எம். பெரேராவின் மறைவு குறித்து அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

"கடந்த நாற்பது வருடங்களாகத் தொழிலாளர்வர்க்கத்தைத் தட்டியெழுப்பி தொழிற்சங்கங்களை உருவாக்கி தொழிலாளர்களின் குறைநிறைகளை அரசிற்குஎடுத்து உரைத்தவர்களுக்கு நிவாரணம் தேடிக்கொடுத்த தலைவரின் மறைவு கூட்டுத் தொழிலாளருக்கு மட்டுமல்ல இலங்கையில் வாழ்கின்ற சகல தொழிலாளர்களுக்கும் பேரிழப்பாகும்

[6ம் பக்கம் பார்க்க]

நல்லைக்குரு மகாசந்நிதானம் பீடாரோகண விழா

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது 13வது பீடாரோகண விழாவன்று பல பிரமுகர்கள் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளிடம் ஆசிபெற்றுக் கௌரவிக்கப்பெற்றனர். யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, யாழ்நகர மேயர் திரு. ஆர். விசுவநாதன், வல்வை நகரசபைத் தலைவர் திரு. ஞானமூர்த்தி, பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் ஆகியோருக்கு ஸ்வாமிகள் பொன்னாடை போர்த்தி, ஆதீன சம்பிரதாயப்படி கௌரவித்தார்கள்.

வண்ணை செந்தில்வேலவன் தேவஸ்தானம், வண்ணை காமாட்சி அம்மன் தேவஸ்தானம், வண்ணை வெங்கடேஸ்வரர் தேவஸ்தானம், நீர்வேலி வாய்க்காற்தரவை தேவஸ்தானம், தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் தேவஸ்தானம், சுன்னாகம் கதிரைமலைச் சிவன் தேவஸ்தானம், திருக்கேதீஸ்வரம் திருவாசகமடம், சுன்னாகம் விநாயகர் ஆலயம் ஆகிய தேவஸ்தானங்கள் கொலுமுகத்தில், நேரில் சமுகந்தந்து பிரசாதம் வழங்கினர். பல சிவாசாரியப் பெருமக்கள் கலந்து சிறப்பித்தார்கள். ஆதீன சிவாசாரியாருள் ஒருவரும் சுன்னாகம் கதிரமலைச் சிவாசாரியப் பெருமகனுமாகிய பிரதிஷ்டா கலாநிதி சிவஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்கள் கொலுபூஜையை நடத்தினார்.

ஆதீன வரதமுத்துக்குமார ஸ்வாமி உற்சவம் மும்முறை வீதிவலமாக நடைபெற்றது ஒரு சிறப்பு. முதற் சுற்று வியாகரண சிரோமணி ஸ்ரீசுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையில் சாஸ்தா குருகுலத்தினர் இணைந்த வேதபாராயணமும், இரண்டாம் சுற்று திருமுறை இசைவாணரின் திருமுறை ஓதலுடனும், மூன்றாம் சுற்று மங்கள இசையுடனும் நடைபெற்றது. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பண்டிதர் சபாரத்தினம், திருமதி வசந்தா வைத்தியநாதன், சிவஸ்ரீ சாம்பசிவக்குருக்கள், பேராசிரியர் சுப்ரமணிய ஐயர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இரவு 7 மணிக்கு பட்டணப் பிரவேசம் நடைபெற்றது விழாவில் பட்டணப் பிரவேசத்தில், கானமூர்த்தி சகோதரர்கள், அளவெட்டி சிதம்பரநாதன் குழுவினர், பத்மநாதன் குழுவினர், நல்லை தேவஸ்தானக் கலைஞர் குட்டிசாமி, தவில் வித்வான் குமரகுரு ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். வித்வான்களுக்கு ஸ்வாமிகள் பீதாம்பரம் மரியாதை செய்தனர். ஆயிரக்கணக்கான பெருமக்கள் விழாவில் சமூகமளித்துச் சிறப்பித்தனர்.

--அடியான்

நல்லைத் திருப்புகழ்!

தன தன தானந்தாந்த
தன தன தானந்தாந்த
தன தன தானந்தாந்த—தன தான
நெடியதுன் வேலுங்காட்டி, மயிலதுசாயல்காட்டி
நேரிடு துன்பம் விட்டி—நெடுநாளா(ய்)
படிமிசைப்பாசம் போக்கிப் பவமதன் வேரும் நீக்கிப்
பயமற வீரந்தீற்றி. எதிலேயும்
அடிவினை நாளுமோட்டி அருவினை பறவேபோக்கி
அடியனை யாளும், நல்ல அமுதான
முழுமுதல் ஞானமோன, முருகனென்றனைவோரும்
அரகர வெனவோதி அயில்விடுமழகான
புனிதனை மயிலேறும் புனிதனைப். புலியாளும்
புயலினை, நல்லையிலுறைகான
கனியினை, இனிதான கவியினைப் புனைவார்தம்
கடவுளைக்கண்ணான வருவோனே
தனியனைக்கணமேனும், பிரியனெனுருபோதும்
தலைமிசைப் பாதங்வைத்தருள்வோனே
கொடியினில் எழிபாட சிவனைமுழைப்பாடக்
குகனெனத் தேரில் வந்தருள் வாரவே!

--"நாவேந்தன்"

மக்கள் கருத்து

தொழிலாளர்களே தீயை அணைத்தனர்

கடந்த 15ம் திகதிய 'ஈழநாடு' பதிப்பில் வெளிவந்த தீ விபத்துப் பற்றிய செய்தியையொட்டி பின்வரும் விளக்கத்தை காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஒரு தொழிலாளி என்ற உரிமையில் தங்களுக்கு அறியத்தருகிறேன்.

14-8-79 ந் திகதியன்று நண்பகலில் நடைபெற்ற எதிர்பாராத தீவிபத்தின் போது எமது தொழிற்சாலையைச் சேர்ந்த முழுத் தொழிலாளர்களும், உத்தியோகத்தர்களும் சேர்ந்து எடுத்த கடும் முயற்சியின் பின்னர்தான் தீயை அணைக்க முடிந்தது. ஆனால் தங்கள் பத்திரிகையில் வெளிவந்த செய்தியின்படி பலாலி தீயணைக்கும் படையினர் வந்துதான் தீயை அணைத்தார்கள் எனப் பிரசுரித்துள்ளீர்கள். இது மிகவும் தவறானதும், தொழிலாளர்களைப் புண்படுத்துவதுமான செய்தியாகும் என நான் நினைக்கிறேன். மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் தீயணைப்பு வசதிகள் போதியளவு இல்லாதவிடத்தும், முழுத் தொழிலாளர்களினதும், உத்தியோகத்தர்களினதும் விடா முயற்சியினால்தான் தீயணைக்கப்பட்டது என்பது உண்மையான செய்தியாகும்.

தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள் அனைவரும் சேர்ந்து தீயை அணைத்த பின்தான் பலாலி தீயணைக்கும் படையினர், போதிய ஆயத்தங்கள் இன்றி தொழிற்சாலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அ. நீதிரஞ்சன்,
மின்சாரப்பகுதி,
காங்கேசன் சீமெந்துத்
தொழிற்சாலை.

தமிழ்மக்களின் சிறந்தநண்பன்; நேர்மைமிக்க அரசியல்வாதி

சி. சுப்பிரமணியம்
(முன்னாள் ஸ்கந்தா அதிபர்)
கே. கதிர்காமநாதன்
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

டாக்டர் என். எம். பெரேராவின் மறைவு உலகத் தொழிலாளவர்க்கத்திற்கும், விவசாயிகளுக்கும், சிறுபான்மையினத்தவருக்கும், அத்துடன் அரசியல் நேர்மைக்கும், நிதானத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவர் இளம் வயதிலேயே தன்னுடைய கல்லூரிப் படிப்பை ஆனந்தாக் கல்லூரியில் முடித்துக்கொண்டு, அக்காலத்துக் குடும்பக் கௌரவத்துக்கமைய மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்றார். உலகத்திலேயே பொருளாதாரத்துறையில் புகழ்பெற்ற லண்டன் ஸ்கூல் ஒவ் கொமேஸ் என்ற சர்வகலாசாலையில் புகழ்பெற்ற பேராசிரியர் லஸ்கியின் மாணவனாக இருந்து அவரின் நன்மதிப்பையும் பெற்று Phd, Dsc. முதலான உயர்ந்த பட்டங்களையும் பொருளியல், அரசியலில் பெற்று டாக்டர் பெரேரா பேராசிரியர் ஹரோல்ட் லொஸ்கியின் வாரிசு இவர்தான் என்று கூறக்கூடிய அளவில் நன்மதிப்பையும் பெற்று 1930ம் ஆண்டு நாடு திரும்பினார். நாடு திரும்பியதும் டாக்டர் பெரேரா சிறிதுகாலம் இலங்கைச் சர்வகலாசாலைக் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

பிரித்தானிய ஏகாதிபத்தியக் கொள்கை இலங்கையில் தீவிரமாக அமுல் நடத்தப்பட்ட காலமான 1980ம் ஆண்டு காலப்பகுதியிலேயே கலாநிதி பெரேராவும் அவருடைய நண்பர்களான திரு. லெஸ்லி குணவர்த்தனா, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. பிலிப் குணவர்த்தனா, திரு. ரொபேர்ட் குணவர்த்தனா, கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்கா போன்றவர்கள் தங்களுடைய பட்டப்படிப்புக்களை ஐரோப்பாவின் சிறந்த சர்வகலாசாலைகளில் தங்களுடைய கல்வியை முடித்துக்கொண்டு நாடுதிரும்பினர். இது இலங்கையின் சரித்திரத்தில் ஒரு முக்கியகாலகட்டமாகும்.

இவர்கள் இலங்கை திரும்பும்போது இடதுசாரி அரசியல் தத்துவஞானிகளான கார்ல்மார்க்ஸ், லெனின், ஏஞ்ஜல்ஸ் போன்றவர்களின் கருத்துக்களிலும், விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்களிலும் அசைக்கமுடியாத நம்பிக்கை உடையவர்களாகவும், 1917ம் ஆண்டு ரஷ்யாவில் ஏற்பட்ட தொழிலாளர் புரட்சியினால் உந்தப்பட்டவர்களாகவும் விளங்கினர்.

1930ம் ஆண்டளவில் இவர்கள் இலங்கை வந்தபொழுது இலங்கையில் எதுவிதமான தொழிலாளர் இயக்கங்களோ வேறு புரட்சி இயக்கங்களோ இருந்ததில்லை. அப்பொழுது காணப்பட்ட ஒரேயொரு அரசியற்கட்சி இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஆகும். இத்தாபனம் மிகவும் அமைதியான முறையில் அரசியற் சீர்திருத்தங்களுக்காகப் பாடுபட்டுவந்தது. அக்காலத்தில் தொழிற்சங்கவாதியாகக் காணப்பட்டவர் காலஞ்சென்ற ஏ. ஈ. குணசிங்கா ஆவர்.

சுதந்திர வேட்கை

இளம் வாலிபர்களான கலாநிதி பெரேராவுக்கும், அவருடைய தோழர்களுக்கும் இந்த இயக்கத்தில் நம்பிக்கை பிறக்கவில்லை. பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியை இலங்கையிலிருந்து அடியோடு அகற்றவேண்டும்; இலங்கை முழுச் சுதந்திரம் அடைய வேண்டும்; இலங்கையில் சமதர்ம ஆட்சி ஏற்படவேண்டுமென்பதே இவர்களுடைய கொள்கையாக இருந்தது.

சூரியமல் இயக்கம்

இவற்றைச் செயற்படுத்துவதற்காகவும், லங்கா சமசமாஜக்கட்சிக்கு முன்னோடியாகவும் வாலிபர் சங்கங்கள் கலாநிதி பெரேராவின் முயற்சியத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற தேர்தலில் குவான் வெலத் தொகுதியில் பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்த செல்வி அடலின் மொலமுரேயைத் தோற்கடித்து, குவான் வெலத் தொகுதி அரசாங்க சபை அங்கத்தவரானார். இவர் 1936ம் ஆண்டு அரசாங்க சபை அங்கத்தவரானமை, ஏற்கனவே அரசாங்கசபையில் அங்கத்தவராக இருந்த டாக்டர் விக்கிரமசிங்காவின் கையை ஓங்கச்செய்து, இரு தோழர்களும் விவசாயிகள், தொழிலாளர்களின் குறைகளை எடுத்துக்கூறி, அவர்களுடைய இன்னல்களைத் தீர்ப்பதற்கு அரும்பாடுபட்டுவந்தனர்.

சியால் அமைக்கப்பட்டன. இதே காலத்தில் ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளால் இறந்த ஆங்கிலேயப் போர்வீரர்களுடைய குடும்பத்தினருக்கும் காயப்பட்டவர்களுக்கும் நஷ்டஈடு கொடுப்பதற்காக பொப்பி டே என்ற பூக்களை விற்றுப் பணம் திரட்டினர். இச்சமயத்திலேயே சூரியமல் இயக்கம் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிரான இயக்கமாக கலாநிதி பெரேராவினாலும் அவருடைய நண்பர்களாலும் இலங்கை சமசமாஜக்கட்சிக்கு முன்னோடியாக ஆரம்பிக்கப்பட்டது.

கலாநிதி பெரேராவின் சரித்திரமும் இலங்கை சமசமாஜக் கட்சியின் சரித்திரமும் பின்னிப் பிணைந்தனவாகும். 1935ம் ஆண்டு மார்கழி மாதத்தில் கலாநிதி பெரேராவினாலும் அவரது தோழர்களினாலும் இலங்கையின் தேசிய சுதந்திரத்திற்குப் போராடுவதற்காகவும் இலங்கையில் ஒரு சமதர்ம ஆட்சியை ஏற்படுத்துவதற்காகவும் இலங்கை சமசமாஜக்கட்சி அமைக்கப்பட்டது. இதுவே இலங்கையில் உள்ள அரசியற் கட்சிகளுள் மூத்தகட்சியாகும்.

கலாநிதி பெரேரா, சுகபோக வாழ்வை விரும்பியிருந்தால் இலங்கைச் சர்வகலாசாலையில் விரிவுரையாளராக இருந்து, பேராசிரியராக வந்து, பின்னர் உப வேந்தராகவும் உயர்ந்திருக்கலாம். ஆனால் அவர் அதை விரும்பாது தன்னைத் தொழிலாளவர்க்கத்தின் நலனுக்காக அர்ப்பணித்தார். இதன் பயனாக 1926ல் டொனமூர் அர

[5ம் பக்கம் பார்க்க]

வேலணை விநாயகர் உற்சவம்

(வேலணை)

வேலணை வடக்கு இலந்தைவனம் அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 25ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவங்கள் நடைபெறவிருக்கின்றது.

பலஇலட்சம் ரூபா செலவில் இக்கோவிலுக்கென செய்யப்பட்ட புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா செப்டம்பர் 2ம் திகதியும், 3ம் திகதி ரதோற்சவமும் இடம்பெறவிருக்கின்றன. (கு)

புதிய அரசின் தலைவிதி இந்திரா காங்கிரஸின் கையில்

கட்சிகளின் நிலை

ஜனதா	205
உத்தியோகபூர்வ காங்.	74
இ காங்கிரஸ்	72
ஜனதா-'எஸ்'	77
மார்க்ஸிய கம்யூனிஸ்ட்	22
அ தி.மு.க.	17
அகாலிதளம்	09
இ கம்யூனிஸ்ட்	07
விவசாய தொழிலாளர்	06
ஐ. நா. மு.	05
புரட்சி சோஷலிஸ்ட்	04
போர்வர்ட்புளக்	03
முஸ்லிம் லீக்	02
மாநாட்டுக்கட்சி	02
குடியரசுக்கட்சி	02
சுயேச்சை	30
வெற்றிடம்	06
சபாநாயகர்	01
மொத்தம்	544

இந்திய அரசியல் வரலாற்றில் மிகவும்முக்கியமான, முழு உலகமுமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் - திரு. சரண்சிங்கின் தலைமையிலான கூட்டரசாங்கத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும்நாள் இன்றாகும்.

பிரதமர் திரு. சரண்சிங் தமது அரசுமீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையைத் தாமே அண்மையில் லோகசபையில் சமர்ப்பித்திருந்தார். இந்திய வரலாற்றில் இவ்வாறாக அரசுஒன்று நம்பிக்கைப் பிரேரணையைச் சமர்ப்பிக்க வேண்டியேற்பட்டதும்இதுவே முதல்தடவையாகும். இப்பிரேரணை இன்று வாக்கெடுப்புக்கு விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சரண்சிங்கின் அமைச்சரவையில் அ தி மு.க சேர்ந்து கொண்டதையும், மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் ஆகியன அரசுக்கு ஆதரவளிப்பதென முடிவு செய்ததையும் கருத்திற்கொண்டு நோக்குகின்றபோது இந்திராகாங்கிரஸ் கட்சி நடுநிலைமை வகிக்குமானால் புதிய அரசு நிச்சயம் நம்பிக்கைவாக்கெடுப்பில் வென்றுவிடும்- ஆனால் புதிய அரசுக்கு ஆதரவளிப்பதில்லை என்று முடிவு செய்துள்ள இந்திராகாங்கிரஸ் நடுநிலைமை வகிக்குமா? எதிர்த்து வாக்களிக்குமா என்பது கூறமுடியாமலிருக்கிறது.

அவசரகாலச் சட்டத்தின் போது நடைபெற்ற சம்பவங்களை விசாரிக்க மொரார்ஜி தேசாயின் அரசாங்கம் நியமித்த விசேட நீதிமன்றங்களை கலைக்கவேண்டுமென்று இந்திராகாங்கிரஸார் பகிரங்கமாகவே கோரிவருகின்ற இதே வேளையில் புதிய சட்ட அமைச்சர் திரு. கக்கர் விசேட நீதமன்றங்களை ஒழிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறிவிட்டார் ராஜ்நாராயணும் அதனையே கூறியிருக்கிறார். ஆனால் ஜெகஜீவன்ராமோ விசேடநீதிமன்றங்கள் [illegible] என்று கூறியுள்ளார்.]

இந்திராவை அரசியலிலிருந்தும் ஒதுக்கியே தீருவேன் என்று சபதம்செய்துகொண்ட ராஜ்நாராயணன் இந்திராவைத் தேர்தலில் தோல்வியடையச் செய்ததும் தலைமை மொட்டையடித்தார். பின்னர் அதேபோன்று மொரார்ஜி தேசாயை அரசியலிலிருந்து ஒதுக்குவேன் என்று சபதம் செய்து அதனையும் நிறைவேற்றியபின் அண்மையில் மொட்டையடித்தார் மக்களைப்பற்றி எதுவித சிந்தனையுமில்லாமல் ஆட்சியிலிருக்கின்ற தனக்குஎதிரானவர்களை வெளியேற்றுவதிலேயே அவரது முழு கவனமும் திரும்பியுள்ளது. அண்மையில்கூட ஜெகஜீவன்ராமின் ஊழல்களை அம்பலப்படுத்துவேன் என்று கூறியுள்ளார். அவர் ஊழல் செய்கின்றபோது அவருடன்இருந்து பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அவரது கட்சியிலிருந்து வெளியேறியபின்னர் அம்பலப்படுத்தப்போவதாகக் கூறுவது அவர் மக்கள் நலனில் எவ்வாறு அக்கறை கொண்டுள்ளார் என்பதையே புலப்படுத்துகின்றது.

புதியஅரசின் தலைவிதியை நிர்ணயிக்கப்போவது இந்திரா காங்கிரஸ்கட்சியின் முடிவே- இந்திராவின் முடிவுதான் நம்பிக்கை வாக்கெடுப்பில் யார் பக்கம் வெற்றியென்பதை நிர்ணயிக்கும்.

குகன்

இவ்வாக்கெடுப்புப் பற்றிப் பலரும் பலவாறுகக் கருத்துத் தெரிவிக்கின்றபோதிலும் புதிய அரசு லோகசபையில் நம்பிக்கையைப் பெற்றுவிடும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை'' என்று பிரதமர் உட்பட அவரது ஆதரவாளர்கள் சகலரும் கூறிவருகின்றனர். "தமது அரசு லோகசபையின் நம்பிக்கையை பெறத்தவறும் பட்சத்தில் தமது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்வதற்கு தாம் ஒரு நிமிடம்கூடத் தாமதிக்கப் போவதில்லை'' என்றும் திரு. சரண்சிங் அண்மையில் நடைபெற்ற சுதந்திரதினவிழாவில் பேசுகையில் கூறியிருக்கிறார்

இதேவேளையில் நம்பிக்கைப் பிரேரணை வாக்கெடுப்பில் சரண்சிங்கின் அரசு தோற்கடிக்கப்பட்டு மீண்டும் ஜனதாக்கட்சிக்கு அரசு அமைக்க அழைப்பு விடுக்கப்படும் போது ஜனதாக்கட்சியே மத்தியில் நிலையான ஒரு அரசை அமைக்கும் என்று ஜனதாக்கட்சியின் பாராளுமன்றக்குழுத் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ஜெகஜீவன்ராம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்

சரண்சிங்கின் ஆட்சியைக் கவிழ்க்க எந்தவொரு கட்சியுடனும் கூட்டுச்சேர ஜனதா கட்சி தயாராக உள்ளது என திரு ஜெகஜீவன்ராம் தெரிவித்துள்ள போதிலும், முன்னாள் வெளியுறவு அமைச்சரும் தொடர்ந்து ஜனதாக் கட்சியில் அங்கம்வகித்து வருபவருமான திரு ஏ பி. வாஜ்பாய் இந்திராகாங்கிரஸின் ஆதரவுடன் ஜனதாக் கட்சி ஆட்சியமைக்க முயல்வதை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இந்நிலையில் 'இந்தியாதான் இந்திரா - இந்திராதான் இந்தியா' என்ற முன்னையகோஷம் மீண்டும் எழக்கூடியநிலை தோன்றியுள்ளதையும் அவதானிக்கக்கூடியதாவுள்ளது

அ.இ.அ.தி.மு.க.லோகசபைஉறுப்பினர்

மாயத்தேவர் கட்சியிலிருந்து ராஜினாமா

[சென்னை]

அனைத்திந்திய அ தி மு கழகத்தைச்சேர்ந்த லோகசபை உறுப்பினர் திரு கே மாயத்தேவர் கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்

அ. தி மு க வின் பாராளுமன்றக் குழுவின் பொருளாளரான திரு மாயத்தேவர் கட்சித் தலைவர் திரு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சர்வாதிகாரியாக நடந்து கொள்வதால் தான் கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்வதாக தெரிவித்துள்ளார்

இன்று நடைபெறவுள்ள புதிய கூட்டரசாங்கத்தின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் தனது மனச் சாட்சிக்குத் தக்கவகையில் நடந்துகொள்ளவுள்ளதாகக் கூறியுள்ள அவர் தொடர்ந்து சுயேச்சை உறுப்பினராகவே இருக்கப்போவதாகத் தெரிவித்துள்ளார். [கு]

இன்றைய பலன்

(ஆவணிமாதம் 4-ம் திகதி திங்கட்கிழமை)

(20-8-1979)

மேடம்: இதயங்கள் இணைவதற்கு இன்று நல்லநாள் அபிப்பிராய பேதங்கள் மறையும், பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர், பந்துக்கள் ஆதரவு பெருகும், குடும்பத்தில் அமைதி நிலவும்.

இடபம்: பொருள் விரயத்துக்கு இடமுண்டு, கடமையாற்றுமிடத்தில் கண்டுடைப்பு வேலைகள் நடைபெறும், நண்பர் ஒருவர் உங்களை ஏமாற்றக்கூடும். சிக்கல்களைத் தவிர்க்கவும்.

மிதுனம்: சமுதாயப்பார்வை உங்களை வட்டமிடும், வாகனம் செலுத்துவோர் அதி நிதானத்துடன் இருக்கவும் பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும். தொழில் புரியும் இடத்தில் பொறுமை வேண்டும்.

கடகம்: தனதானியத்தில் நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக்கூடும், வேண்டியவர் ஒருவரைப்பகைத்துக் கொள்ள நேரிடும் கடமையாற்றுமிடத்தில் நிதானம் வேண்டும் மௌனம் நன்று.

சிங்கம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்த தினம், தெய்வத்தின் அருள் தாராளமாய்க் கிடைக்கும்.

கன்னி: வேண்டியவர்களின் ஆதரவுதாராளமாகக் கிடைக்கும், நீண்டநாள் பிணி இன்று விடைபெறும் குடும்பத்திலும் மகிழ்ச்சி உண்டு.

துலாம்: வேண்டிய அளவுக்கு இன்று வெள்ளிப்பணம் தள்ளும் மாதுவழிப் பெருமைக்கிடமுண்டு மனப்போக்காவும் நடக்கும் இன்று கல்வியில் சிறப்பும். உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

விருச்சிகம்: வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு இது மேலும் குட்டிபோடும் பண விவகாரங்கள் மகிழ்ச்சியளிக்கும், புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்துக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தனுசு: வயிற்றுக் கோளாறு தோன்றக்கூடும், உணவு விஜயத்தில் அதிக கவனம் செலுத்தவும், வேவுகணைகளைத் தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர் நண்பர் ஒருவருடன் மோதல் ஏற்படலாம் அமைதிநன்று.

மகரம்: நீண்டநாள் எதிர்பார்த்த, நல்ல திருப்பம் இன்று ஏற்படமுடியும் குடும்ப விவகாரங்களில் பிணைப்புகள் இருக்கும், காதல் உலகில் இனிவான சம்பவங்கள் இடம் பெறும், சுகபோக நாள்.

கும்பம்: அரச பயத்துக்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள வேண்டாம் மின்னியல் பொறியில் பகுதிகளில் கடமையாற்றுபவர்கள் மிகவும் கவனம் செலுத்தவும்.

மீனம்: பூமியால் இலாபம் உண்டு, புத்திரர்புகழும்சேரும் பொதுசனத் தலைமைக்கான வாய்ப்புக் கிடைக்கும், உடல்நலம் பாதிக்கப்படக் கூடும் ஆசையாக் வாய்வுப் பதார்த்தங்களை நீக்கிக் கொள்ளவும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

பிரிட்டனிலுள்ள

20 லட்சம் ஆசியமக்களை வெளியேற்ற முயற்சி?

லண்டன், ஆக 19

பிரிட்டனில் வெளிநாட்டு பிரஜைகளுக்கு பிரஜா உரிமை வழங்குவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் அங்குள்ள 20 லட்சம் ஆசிய மக்களை படிப்படியாக வெளியேற்ற வழிவகுக்கப்படும் என்று பிரிட்டிஷ் எம். பி. திரு ஹனேபல் தெரிவித்துள்ளார்.

பொதுநல அமைப்பு நாடுகளிலும் பாகிஸ்தானிலிருந்தும் பிரிட்டனில் வந்துகுடியேறும் மக்களுக்கு பிரஜா உரிமை வழங்கும். 1948ம் ஆண்டு திசய தள்ளுபடி செய்யுமாறு அவர் பிரிட்டிஷ் அரசை வற்புறுத்தி உள்ளார்' (இ)

சமத்துவத்தை விதைத்து வேரூன்றச் செய்தவர்

என். எம் முக்கு பண்டிதர் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

''மக்கள்மத்தியில்சமத்துவச் சகோதரத்துவத்தை விதைத்து வேரூன்றச் செய்தவர் மறைந்த மாபெரும் தலைவர் என். எம். பெரேரா ஆவார்.''

இவ்வாறு கலாநிதி என். எம். பெரேராவின் மறைவு குறித்து ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா பொ இரத்தினம் தமது இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளார்.

திரு. கா. பொ. இரத்தினம் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது: கலாநிதி என். எம் மின் இடத்தை ஈடு செய்ய இனி எவராலும் முடியாது. எனவே திரு. என். எம் பெரேராவின் இழப்பு பேரிழப்பாகும்.

உற்ற நண்பர்

அரசாங்க எழுது சேவையாளர் காங்கிரஸ் தலைவர் திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளதாவது: ''டாக்டர் என். எம் தமிழரினதும் முழுப்பாட்டாளி வர்க்கத்தினரதும் உற்ற நண்பராகவும் உண்மையான நண்பராகவும் விளங்கினார் தமிழ் மக்களின் மொழிப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என விரும்பியவர் திரு என். எம். பெரேரா''

எழுச்சியை ஊட்டியவர்

இலங்கை தோட்டத்தொழிலாளர் செங்கொடிச் சங்கச் செயலாளர் திரு ஆ இராமையா தமது அனுதாபச்செய்

[5ம் பக்கம் பார்க்க]

---

6 அம்சக்கொள்கை ரீதியில் அரசுடன் இணைந்துள்ளோள்

பாலாபழனூர்

(புதுடில்லி)

குறைந்தபட்ச ஆறு அம்சக் கொள்கையின் அடிப்படையிலேயே அ இ அ தி மு க மத்திய மந்திரிசபையில் இணைந்து கொள்கின்றது என்று கட்சியின் பாராளுமன்ற குழுத்தலைவர் திரு. பாலபழனூர் தெரிவித்தார்.

தமிழக முதல்வரும் அ தி மு க. தலைவருமான திரு எம். ஜி இராமச்சந்திரனின் கடிதத்தை பிரதமரிடம் தாம் கொடுத்துள்ளதாகவும் அக்கடிதத்தில் எமதுகட்சியின் ஆறம்சக் கொள்கைகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அக் கொள்கைகளின் பெரும்பாலானவற்றை பிரதமர் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் திரு. பழனூர் தெரிவித்தார். (இ)

அரசாங்க அதிபருக்கு பாராட்டு

[யாழ்ப்பாணம்]

''யாழ் மாவட்டத்தின்புதிய அரசாங்க அதிபராகப் பதவி பெற்றுள்ள தங்களுக்கு சகல மங்களங்களும் உண்டாவதுடன் தங்கள் சேவைக் காலத்தில் மக்கள் அனைவரும் மனநிறைவு பெறவேண்டுமெனவும் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்''

இவ்வாறு யாழ். சிவானந்த குருகுல பரிபாலனசபைத் தலைவர் கலாநிதி சோமாஸ்கந்தக் குருக்கள், திரு யோகேந்திராதுரைசுவாமிக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார். (கு)

ராணி
(யாழ். நகர்)
கடைசி 3 தினங்கள்
தினசரி 10-30, 2-30, 6 30, 9-45
சிவாஜி-ஜமுனா
நிச்சய தாம்பூலம்
(புதிய பிரதி)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி; 10-30 2-30 6-30, & 9-45
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்

லிடோ
(யாழ் நகர்)
போன் 7698 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

வின்சர்
(யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 3 காட்சிகள்
10-30, 2-00, 6-00.
சோபன்பாபு-விஜய லலிதா நடித்த
ரிவோல்வர் ரீட்டா

REGAL (Jaffna) 2nd CROWDED WEEK
Daily 10-30, a. m. 2-00, 4-30, 7-00 p.m; only
No Passes Please
THE OMEN
Twentieth Century Fox presents
GREGORY PECK—LEE REMICK
விநாடிக்கு விநாடி உங்களை மெய்சிலிர்க்க
வைக்கும் பயங்கரப் படம்.
"ஆவிகளின் அட்டகாசம்"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
மாதர் குலத்தின் அன்பானவேண்டுகோளுக்கு
இணங்கி மீண்டும் 24-8-79-ந் திகதிவரை
மட்டும். எக்காரணங்கொண்டும் மேலும்
நீடிக்கப்படமாட்டாது.
சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்
(கலர்)
பார்த்தவர்கள் பார்க்காதவர்களுக்கு ஐயப்பனின் வரலாற்றைக் கூறி அவர்களுக்கும் மணிகண்டன் அருள் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பத்தை அளித்த உங்களுக்கும் ஐயப்பன் அனுக்கிரகம் உண்டாகும்.
இதுவே கடைசி சந்தர்ப்பம்.
சாமிசரணம்! ஐயப்ப சரணம்!!

2-வது வெற்றி வாரம்
SRIDHA-Jaffna ஸ்ரீதர்
at 10-30 a m. 3-00, & 7-30 p.m;
The Greatest Family Entertainment of all Times;
Bring the Young ones - They will Like it.
CECIL B DEMILLE'S
பிரமாண்டமான வெளியீடு!
TEN COMMANDMENTS
பத்துக் கட்டளைகள்
(புதிய டெக்னிக் கலர்— தமிழில்)
Color
Starring; Two Great Stars
CHARLTON HESTON — YUL BRYNNER
SEE THE PARTING OF THE RED SEA
THE MOST SPECTACULAR SCENE
EVER FILMED
செங்கடல் இரண்டாகப் பிரியும் காட்சி
தத்ரூபமாகப் படமாக்கப்பட்டுள்ளது

SHANTHI JAFFNA Phone: 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30
The Greatest Sea Adventure In History Has Just Begun!
RICHARD HARRIS—OMAR SHARIF in
"JUGGERNAUT"
Adventure — Suspense — Color
சாதாரணமாகச் சமுத்திரத்தில் நடமாடும் பாரிய கப்பல்களில் நடைபெறும் [illegible] சம்பவங்கள், விமானத்திலிருந்து பரசூட்டில் இறங்கும் விமானிகள் அவர்கள் சமுத்திரத்திலிருந்து கப்பல் சிப்பந்திகளால் காப்பாற்றப்படுதல் ஆகிய சாகசங்கள் நிறைந்த படம்
கொந்தளிக்கும் சமுத்திரத்தில் பிரமாண்டமான 'பிரிட்டானிக்' கப்பலில் நடக்கும் சம்பவங்களை குழு குழு வர்ணத்தில் உங்கள் முழுக் குடும்பத்துடனும் பார்த்து மகிழுங்கள்.

தமிழ்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கட்சிக்குத் தடை; உயிராபத்து

1938ம் ஆண்டு இரண்டாவது உலக மகாயுத்தம் ஏற்பட்டதும், இலங்கைச் சமசமாஜக்கட்சி அதனை ஏகாதிபத்திய யுத்தம் என வர்ணித்ததன் பயனாகக் கட்சி தடைசெய்யப்பட்டது. பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் கலாநிதி பெரேராவும் அவரது தோழர்களும் போகம்பரைச் சிறையில் 1940ம் ஆண்டில் சிறைவைக்கப்பட்டதும் சிறையிலிருந்த கலாநிதி பெரேராவின் உயிருக்கும், ஏனைய தோழர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய நிலை உருவானது. இந்தச் சந்தர்ப்பத்தில் கலாநிதி பெரேரா சில உபாயங்களைக் கையாண்டு தானும், தன்னுடைய தோழர்களும் அந்தோனிப்பிள்ளை என்ற சிறைப் பணியாளருடன் சிறையிலிருந்து தப்பியோடித் தலைமறைவாகினர். இரு மாதங்கள் பம்பலப்பிட்டியிலிருந்த பின்னர் யாழ்ப்பாணம் வந்து, வல்வெட்டித்துறை மூலமாக இந்தியா சென்றனர். கலாநிதி பெரேரா இந்தியாவில் சுப்பையாபிள்ளை என்ற பெயரில் வங்கியில் வேலைபார்த்து வந்தார். ஆனால் இது அதிக காலம் நீடிக்கவில்லை. சிறிது காலத்தின் பின்னர் இந்தியாவில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டனர். பின்னர் யுத்தம் முடிவடைந்து, கட்சி மீது விதிக்கப்பட்ட தடை 1945ம் ஆண்டு நீக்கப்பட்டதும் கலாநிதி பெரேராவும், தோழர்களும் விடுதலைசெய்யப்பட்டனர்.

பிரித்தானியாவில் என். எம், இருந்திருந்தால்...

1947ம் ஆண்டு சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கலாநிதி பெரேரா எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெறக்கூடியதாக இருந்தது. இவர் ஒரு மார்க்ஸிஸவாதியாக இருந்தபோதிலும் இவர் பாராளுமன்ற அரசியலுக்குச் செய்த தொண்டு அளப்பரியது. "பிரித்தானியாவில் இவர் இருந்திருந்தால் ஒரு சிறந்த தொழிற்கட்சிப் பிரதமராக இருந்திருப்பார்" என அப்போது இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தராயிருந்த சேர் ஐவர் ஜென்னிங்ஸ் குறிப்பிட்டார். மீண்டும் இவர் 1956ம் ஆண்டு தொடக்கம் 1960ம் ஆண்டு வரை எதிர்க்கட்சித் தலைவராகக் கடமையாற்றினார். இரு தடவைகள் நிதிமந்திரியாகக் கடமையாற்றினார்.

தமிழ்மக்களின் சிறந்த நண்பர்

தமிழ் மக்களுடைய உரிமைகளை பாதிக்கக்கூடிய சட்டங்கள் இயற்றப்பட்ட நேரங்களில் அவற்றிற்கெதிராக வாதாடியதுடன் டாக்டர் பெரேரா தமது வாக்கையும் எதிராகவளித்தார். உதாரணமாக [1] இலங்கைப்பிரஜா உரிமைச் சட்டம் [2] இந்தியர் பாகிஸ்தானியர் வதிவுரிமைச் சட்டம். [3] தனிச்சிங்களச் சட்டம். டாக்டர் பெரேரா தமிழர், இந்தியர், முஸ்லிம்கள் என்ற பாகுபாடு சிறிதும் இல்லாதவர். 1956ம் ஆண்டில் பாராளுமன்றத்தில் தமிழ் மொழிக்கும் சமத்துவம் கொடுக்க வேண்டுமென்ற மசோதாவைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில், தான் ஓர் அரசியற் பாலைவனத்திற் செல்வதாகக் குறிப்பிட்டார்.

1956ம் ஆண்டு தனிச்சிங்கள மசோதா மீது உரையாற்றி அதனை எதிர்த்து வாக்களிக்கும்போது அவர் பின்வருமாறு கூறினார்.

"உண்மையில் இலங்கை நாட்டின் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால், எந்தெந்த சந்தர்ப்பங்களில் சிறுபான்மையினர் ஏமாற்றப்படக்கூடியதாக இருந்ததோ அந்தந்தச் சந்தர்ப்பங்களில் அவர்கள் ஏமாற்றப் பட்டிருக்கின்றனர்."

இவ்வாறு சாதி, இன, மத வேறுபாடின்றி நேர்மைக்கும் நியாயத்திற்குமாகக் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலம் போராடிய ஒரு உத்தமனை, பாராளுமன்ற வாதியை கல்விமானை நாடு இழந்து விட்டது.

RIO (Jaffna-TownHall)
Phone: 7607
2ND
CAR CRASH WEEK
Daily 4 Shows
DRIVER

நாகம்ஸ் [சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார் ஜானகி
பார் மகளே பார்

வெல்லி
சாவகச்சேரி
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
ஆலயமணி

இளைஞர் பேரவை செயற்குழு புதிய யாப்பை ஏற்றது

[யாழ்ப்பாணம்]

தமிழ் இளைஞர் பேரவைக்கான புதிய யாப்பை பேரவையின் செயற்குழு ஏற்றுக் கொண்டது.

திரு. இரா வாசுதேவ தலைமையில் வவுனியாவில் நடைபெற்ற மத்தியசெயற்குழுக் கூட்டத்திலேயே இப்புதிய யாப்பு வெளியிடப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையை ஏற்று அதன் அமைப்புக்கு இணங்க அதன் அங்கமாக தனித்துவமான முறையில் இயங்குவதென்று தமிழ் இளைஞர் பேரவை ஏற்கனவே தீர்மானித்ததற்கிணங்க புதிய யாப்பு தயாரிக்கப்பட்டது.

செயற்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த யாப்பை விரைவில் நடைபெற உள்ள பேரவையின் பொதுச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புரட்சிவாத சமசமாஜிகளுக்கு நன்றி

யாழ். மாவட்டத்தில் அவசரகாலச் சட்டம் அமுல் செய்ததைக் கண்டித்து கொழும்பில் ஊர்வலம் நடத்திய புரட்சிவாத சமசமாஜக் கட்சிக்கு நன்றி தெரிவிப்பதென்றும்—

அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

விஞ்ஞான சோஷலிஸ அடிப்படையில் தமிழ் இனத்தை ஒரு மறுமலர்ச்சி அடைந்த சமுதாயமாகக் கட்டி எழுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

[இ]

பௌராணிக வித்தகருக்குப் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

பௌராணிக வித்தகர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மாவைப் பாராட்டியும் அவரது 'ஞானத்தமிழ்' நூல் வெளியீட்டும் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெற்ற விழாவில் யாழ். ஆனந்த குருகுல பரிபாலன சபை, அகில இலங்கைக் குருமார் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் கலாநிதி நா. சோமாஸ்கந்தக் குருக்கள் கலந்துகொண்டு ஆசி கூறினார்.

[இ]

துர்க்காதேவி உற்சவம்

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 24-ந் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 3ந் திகதி திங்கட்கிழமையும், தீர்த்தோற்சவம் மறுநாளும் நடைபெறும். [கே-வி]

யாழ்ப்பாணத்தில் கொழும்பு 2-வது எம். பி.

[யாழ்ப்பாணம்]

கொழும்பு மத்திய தொகுதி இரண்டாவது எம் பி ஜனாப் ஜாபீர் ஏ காதர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

இளவாலையில் இடம் பெற்ற ராணி-ஸ்ரீதர் சினிமா உரிமையாளர் காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் புதல்வன் பாலேந்திராவின் மரணச்சடங்கில் கலந்துகொள்வதற்காக ஜனாப் ஜாபீர் ஏ காதர் தமது பரிவாரங்களுடன் ஹெலிகொப்டரில் யாழ்ப்பாணம் வந்தார்.

(கோ)

சமத்துவத்தை ...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தியில் தெரிவித்துள்ளதாவது: "கலாநிதி என். எம். பெரேராவின் திடீர்மறைவு மக்களைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அவர் சகல இனங்களுக்கு மத்தியிலும் ஐக்கியத்தை உருவாக்கப்பாடுபட்டவர். அதோடு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் மக்களுக்கு எழுச்சியை ஊட்டினார். இவரது மறைவுக்கு செங்கொடிச் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது"

முதுபெரும் அரசியல்

அறவழிப் போராட்டக்குழு விடுத்துள்ள இரங்கற்செய்தியில்:

"இலங்கை அரசியல் வானில் பிரகாசித்த முதுபெரும் அரசியல் வாதியாகிய காலஞ்சென்ற கலாநிதி என். எம். பெரேராவின் மறைவு அரசியலுக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

வடபகுதியில் வாழ்கின்ற ஆயிரக்கணக்கான சீவல் தொழிலாளர்களின் பொருளாதார மேம்பாட்டுக்குகூட்டுறவு முறையை அறிமுகம் செய்து அமுல்படுத்தி அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தியமை மிகவும் பாராட்டத்தக்க அன்னாரின் செயல்களில் ஒன்றாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய, சாவகச்சேரி அறவழிப் போராட்டக்குழுவினர் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றனர்.

[கா]

ராஜா
யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ஸ்ரீவித்யா
நடித்த
அபூர்வ ராகங்கள்
(புதிய பிரதி)

"ஏழை மக்களின் நம்பிக்கை ஒளி மறைந்து விட்டது"

(யாழ்ப்பாணம்)

"பாட்டாளி மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கும், சகல மக்களினதும் ஐக்கியத்திற்கும தமது வாழ்நாளை அர்ப்பணித்த டாக்டர் என் எம் பெரேராவின் மறைவு சோஷலிச இயக்கத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அரசியல் துறையிலும் தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் அவருக்கிருந்த ஈடுபாடு, சாதாரண ஏழை மக்களுக்குக் கிடைத்த நம்பிக்கை ஒளியாயிருந்தது. இன்று அந்த ஒளி மறைந்துவிட்டது."

இவ்வாறு கலாநிதி என் எம் பெரேராவின் மறைவு குறித்து நெடுந்தீவு முன்னேற்றக்கழகத்தின் நிர்வாகச் செயலாளர் திரு நா இலட்சுமணராசா விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

"பிரிட்டிஷ் காலனித்துவத்திற்கு எதிராகப் போராடிய திரு பெரேரா தொழிலாளர் இயக்கத்தின் முன்னோடியாக விளங்கியதுடன் தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு நியாயபூர்வமான தீர்வு காண வேண்டும் என்பதிலும் அவாக் கொண்டிருந்தார்" என்றும அச்செய்தியில் தெரிவித்தார்

(கா-இ)

அமரர் என். எம். முக்கு அஞ்சலி.

அழிக்கமுடியாத

ஒரு நினைவுச் சின்னம்

(யாழ்ப்பாணம்)

ஒடுக்கப்பட்டு உரிமை மறுக்கப்பட்டு, கல்வி பொருளாதாரத் துறைகளில் பின்தள்ளப்பட்டு வாழ்ந்த சிறுபான்மைத் தமிழ் சமூக மக்களின் மறுமலர்ச்சிக்கு கூட்டுறவுத் துறையில் வித்திட்ட மேதை கலாநிதி என். எம். பெரேராவின் மறைவு இந்நாட்டின் பல்லாயிரக் கணக்கான பாட்டாளி வர்க்கத்துக்குப் பேரிழப்பாகப் போய்விட்டது.

1972ம் ஆண்டு மே தினத்தன்று அவர் ஆரம்பித்து வைத்த தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று கூட்டுறவுத் துறையின் சிகரமாக பல்லாயிரக் கணக்கானவர்களின் ஜீவநாடியாக விளங்குகிறது.

உலகச் சந்தையில் சீனித் தட்டுப்பாடு இருந்த காலத்தில், வடபகுதியில் பனைவெல்லம் உற்பத்தி செய்வதற்கு அனுமதிக்கும்படி எமது சமாசம் விடுத்த கோரிக்கைக்குச் செவிசாய்த்து உடனடியாக 5 இலட்சம் ரூபாவை இத்துறைக்கு ஒதுக்கி தொழிற்சாலைகளை அமைத்தார். இதனால் 1975ம், 1976ம் ஆண்டுகளில் மொத்தமாக 60 இலட்சம் ரூபாவை எமது சங்கங்கள் வருமானமாகப் பெற்றன. பனைவெல்லத் தொழில் புத்துயிர் பெற்றது. காவியமாகி விட்ட அவரின் வரலாற்றின் ஒரு பகுதியாக அமைந்து விட்ட பனம்பொருள் அபிவிருத்தித் திட்டங்கள் இன்று நன்கு செயற்பட ஆரம்பித்துள்ளன.

மார்க்சிய நெறியை இந்நாட்டில் அறிமுகப்படுத்தி அதன் தத்துவத்தினுள் ஒன்றான கூட்டுறவு முறையில் ஒரு திட்டத்தை நூறுவீதம் வெற்றிகரமாக செயற்பட வைத்தார்.

அவருடைய திட்டத்தினுள் உருவான சில அபிவிருத்தி வேலைகளைச்செய்யும் வாய்ப்பு, நேரில் பழகும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தபோது மாற்றுக்கட்சிக் காரரையும் மதித்து ஏழை எளிய மக்களின் வாழ்வுக்குரிய திட்டமெனில் அதனை அஞ்சாது அமுல் நடத்தும் துணிவு அவரிடம் கண்டேன்.

சைதடியில் பனஞ்சாராய வடிசாலையை நிறுவ எமக்கு உதவிய அவர், அத்தொழிற்சாலையால் எத்தனை தொழிலாளர் என்று எல்லை இல மாதங்களுக்கு முன்னர்தான் வினவியிருந்தார்.

அமரராகிவிட்ட என். எம். நினைவுச் சின்னமாக வடபகுதி தெங்கு பனம்பொருள் சங்கங்கள் அமைந்து விட்டன. இந்த நினைவுச் சின்னத்தை இனி யாராலும் அழிக்க முடியாது.

க. நடராசா
செயலாளர், தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சமாசம்.

"தொழிலாளர் தோழன்"

(மாவிட்டபுரம்)

சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. என். எம். பெரேராவின் மறைவுக்கு காங்கேசன் துறை சிமந்து பொதுத் தொழிலாளர் யூனியன் அஞ்சலி தெரிவித்துள்ளது.

தலைவர் திரு எஸ் கணபதிப்பிள்ளை தலைமையில் கூடி அனுதாபத்தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதுடன் இன்று காங்கேசன்துறையில் அஞ்சலிக் கூட்டமொன்றை நடத்துவதெனவும் யூனியன் முடிவு செய்துள்ளது.

"தொழிலாளர் நன்மைக்காக அயராது பாடுபட்டுழைத்த தொழிலாளர் தோழனை இழந்துவிட்டோம்" என்ற அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் லங்கா சமசமாஜ வாலிப சங்கம் அன்னாரின் மறைவையொட்டி விடுத்துள்ள செய்தியில்: "அரசியல் ஞானியும், சமதர்மத்தின் தலைமகனும் ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்கு வித்திட்ட வருமான அன்னாரின் மறைவு ஈடுசெய்ய முடியாதது" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

தொழிாலளருக்கு.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு கி முதலியார் கலாநிதி டாக்டர் என் எம் பெரேராவின் மறைவு குறித்து தெரிவித்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

"தமிழரின் நம்பிக்கைபெற்ற ஒருசிங்களப் பெருந்தலைவர்"

(யாழ்ப்பாணம்)

"தமிழர் இதயங்களில் அசைக்கமுடியாத நம்பிக்கை பெற்ற சிங்களப் பெருந்தலைவர்களில் என் எம்முக்கு ஒரு தனி இடம் உண்டு"

இவ்வாறு கலாநிதி என். எம். பெரேராவின் மறைவு குறித்த தமிழ் தொழிற்சங்க கூட்டணி செயலாளர் நாயகம் ஐ தி. சம்பந்தன் வெளியிட்ட அனுதாபச்செய்தியில் வெளியிட்டுள்ளார்.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"இலங்கையின் தலைசிறந்த அரசியல்வாதியும் சமதர்ம இலட்சியத் தலைவனும் உலகம் போற்றும் தொழிற்சங்கவாதியுமான கலாநிதி என். எம். பெரேரா மறைவு" இலங்கைக்கு மட்டுமல்ல சமதர்ம சோஷலிஸ்ட் உலகிற்கும் ஒரு பேரிழப்பாகும்; ஈழத்தமிழர்களுக்கு சமஉரித்தளித்து வழங்கப்படவேண்டுமென நீண்டகாலமாகப் போராடிவந்த தலைவர் திரு. என். எம். இறுதிக்காலத்திலும் தமிழர் பிரச்னை தீர்க்கப்படவேண்டுமென குரலெழுப்பி வந்தார். தமிழர் இதயங்களில் அசைக்க முடியாத நம்பிக்கைபெற்ற சிங்களப் பெருந் தலைவர்களில் என், எம் முக்கு ஒரு தனி இடம் உண்டு. கடந்த 45 வருடங்களாக ஒரு சோசலிஸ்ட் சமுதாயத்தை உருவாக்க பாடுபட்டு வந்த இவர் பல தோல்விகளைக் கண்டும் இலட்சிய நோக்குத் தவறாது தொடர்ந்து போராடி வந்தார்"

(செ)

வடபகுதியின்

வளமான வாழ்வுக்கு வழிவகுத்தவர்

(புலோலி)

"1956ம் தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராக சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்துக் கோரி 20 சிங்களத் தலைவர்களுடன் சேர்ந்து பாராளுமன்றத்திலும் வெளியிலும் போராடி கல்லடியும் பொல்லடியும் குண்டடியும் பட்ட ஒரு மாபெரும் இடதுசாரித் தலைவரை நாம் இழந்துவிட்டோம்"

இவ்வாறு அமரர் என், எம். பெரேரா மறைவுகுறித்து இலங்கை சமசமாஜக்கட்சிப் பருத்தித்துறைக் கிளை வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளது.

அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1936லிருந்து 40 ஆண்டுகள் பாராளுமன்றத்தில் சமசமாஜக்கட்சியின் தலைவராகப் பதவிவகித்து மார்க்சிச லெனினிச சிந்தனையின் ஊற்றாக விளங்கி, "அனைத்து மக்களின் உயர்ந்த வாழ்வுக்கு சிறப்பாக சிறுபான்மை மக்களை உயர்த்துவதற்கு உழைத்துவந்தவரும் நிதி மந்திரியாகவிருந்தகாலத்தில் திட்டமிட்டு வடபகுதியின் வளமான பொருளாதார வாழ்வுக்கு வழிவகுத்தவருமான எமது ஒப்பற்ற தலைவனுக்கு தமிழ் மக்களின் நன்றிக்கடனாக எங்கள் இறுதி அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்".

பலப்பரீட்சையில்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

தாமும் அப்படியான நிலைக்குத் தள்ளப்பட்டதாகவும் கூறினர்.

இப்படியானதொரு பலத்த சோதனையின் மத்தியில்தான் இன்று பிரதமர் சாண்பிங் தமது அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்த பிரேரணையைத் தாக்கல்செய்கின்றார். நம்பிக்கைவாக்கெடுப்பு இன்மாலை நடைபெறும்.

கற்கோவள...

1-ம் பக்கத் தொடர்ச்சி

மராட்சி வடக்கு, கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் இம்மாதம் 24ம் திகதி வரை ஏற்றுக்கொள்வார்.

ரூ. 16 லட்சம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு பெருமுயற்சி எடுத்து அமைச்சின் அங்கீகாரத்தையும் பெற்றுத்தந்த தனைமக்கா மாவட்ட அமைச்சின் செயலாளர் யோகேந்திரா துரைசுவாமிக்கு சமாஜ இயக்குநர்சபை பாராட்டுத் தெரிவித்துள்ளது (செ)

திருமண அழைப்பு

மணமகன்	மணமகள்
திருவளர் செல்வன்	திருநிறை செல்வி
Dr. ச. தேவேந்திரன்	Dr. தே. ராஜம்
(அரசினர் வைத்தியசாலை, நுவரெலியா)	(அரசினர் வைத்தியசாலை, நுவரெலியா)

காலம்: 27-8-79
தினம்: திங்கட்கிழமை
நேரம்: பகல் 9-30 தொடக்கம் 10-30 வரை
இடம்: நல்லூர் சிவன் கோவில் (ஸ்ரீ கமலாம்பிகா ஸமேத ஸ்ரீ கைலாசநாதஸ்வாமி தேவஸ்தானம்)

மணவிழாவுக்கு அனைவரும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி	திரு திருமதி
பரமேஸ்வரி சண்முகசுந்தரம்	ந. தேவராஜன்
392/2, காங்கேசன்துறை வீதி,	(நில அளவையாளர்)
யாழ்ப்பாணம்.	255, அரசடி வீதி,
	யாழ்ப்பாணம்.

3345

மக்கினொன் டிரவல் சேவிஸ் (இலங்கை) லிமிட்டெட்

Mackinnon Travel Service (Ceylon) Ltd

தங்களது இனி ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.

இங்கு
● உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
● அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
● சற்றுனாக்கள்
● பாஸ்போர்ட்
● விசா

இப்படி எல்லாவசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்கு செய்துகொள்ளலாம்.

உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கொழும்பு

19-8-79 மாலை 5 மணியளவில் கல்லூரி மைதானத்தில் நிகழ்ந்த பரிசுப்போட்டி முடிவுகள்:

1-ம் பரிசு: 20756
2-ம் பரிசு: 45674
3-ம் பரிசு: 26284

ஆறுதல் பரிசுகள்:

21583	49929	23324	32390
04516	37618	41429	37666
25764	61257		

பரிசுபெறும் சீட்டுகளுக்குரியவர்கள் பின்வருபவர்களுடன் தொடர்புகொள்க.

1. அதிபர்: யாழ். இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்,
2. செயலாளர்: யாழ். இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
106 இப்பத்தாவ மாவத்தை,
கொழும்பு-5.

ம. இராசநாயகம்
பரிசுப்போட்டி உப குழுவுக்காக.
19-08-1979

3347

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No 49. Telegeram Eelanadu, T.Phon: 389.